<u>தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | **:** | 62/2020 | சாட்சியம் | **:** | **MW1** |
| **Name** | **:** | திரு.யுவராஜ் | | | |
| **Date** | **:** | **09.04.2026** | | | |
| **Time** | **:** | **11.22 a.m to 11.51 a.m** | | | |

<u>நி.த.சா.**1.**திரு.யுவராஜ் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை</u>

நி.சா.ஆ.**10** எங்கள் நிறுவனத்தின் சான்றிட்ட நிலையாணை என்றால் ஆமாம். அந்த சான்றிட்ட நிலையாணை எங்கள் நிறுவன தொழிலாளர்களுக்கு பொருந்தும் என்றால் ஆமாம். அவை எங்கள் நிறுவன தொழிலாளர்களுக்கு பொருந்தும் என்பதால் தான் தாக்கல் செய்திருக்கிறோம் என்றால் ஆமாம். பிரிவு 17 ல் தொழிலாளர்களை வேறு மாவட்டங்களுக்கு, மாநிலங்களுக்கு, நாடுகளுக்கு பணியிட மாற்றம் செய்வது பற்றி சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பின்னர் சாட்சி படித்து பார்த்து விட்டு இருப்பதாக சொன்னார். நி.சா.ஆ.**6** முதல் **9** வரை உள்ள ஆவணங்கள் பணி மாறுதல் உத்தரவு என்றால் ஆமாம். நி.சா.ஆ.**6,** 06.12.2018 உத்தரவு எந்த தேதியில் மனுதாரருக்கு வழங்கப்பட்டது என்றால் 06.12.2018 அன்றே வழங்கப்பட்டது. அந்த ஆவணத்தில் அதிகாரியின்

கையொப்பத்திற்கு கீழ் தேதி உள்ளதா என்றால் இல்லை. மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான கையொப்பம் உள்ளதா என்றால் இல்லை. அந்த உத்தரவில் நிர்வாக தேவைக்காக பணி மாறுதல் செய்யப்படுவதாகதான் சொல்லப்பட்டுள்ளது. குறிப்பாக என்ன தேவை என்பது குறிப்பிடப்படவில்லை என்றால் ஆமாம். ஆனால் தணிக்கை பணிக்காக (USFDA) பணி மாறுதல் செய்யப்பட்டார். மேற்படி பணிக்காக பணி மாறுதல் செய்யப்ட்டார் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேலும் அந்த உத்தரவில் தற்காலிக பணி மாறுதல் என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அந்த பணி மாறுதல் உத்தரவு நிரந்தரமானது என்பதால் தான் அதில் மேலான, ஒளிமயமான எதிர்காலத்திற்கு வாழ்த்துகள் என சொல்லி உள்ளோம் என்றால் அது பொதுவான படிவமாகும். அந்த உத்தரவில் Analytical என்ற பதவி புதியதாக சேர்க்கப்படட்டதாக கண்டுள்ளது என்றால் ஆமாம். அவருக்கு வழங்கிய பணி உத்தரவில் என்ன Designation இருந்ததோ அதை தான் பணி மாறுதல் உத்தரவிலும் குறிப்பிட்டு இருந்தோம். பணி நியமன உத்தரவில் சேதுராமனின் பதவி Analytical என கண்டுள்ளதா என்றால் இல்லை. நி.சா.ஆ.7 28.01.2019 தேதியிட்ட கடிதமானது 29.01.2019 அன்று தான் தபால் மூலம் அனுப்பட்டது என்றால் ஆமாம். அதிலும் பணி மாறுதல் நிர்வாக தேவைக்கு என மட்டும் தான் சொல்லப்பட்டுள்ளது. குறிப்பிட்டு காரணம் சொல்லப்படவில்லை என்றால்

ஆமாம். நி**.**சா**.**ஆ**.8,** ஆனது 31.01.2019, அன்று அனுப்பப்பட்டது என்றால் தேதி சரியாக தெரியவில்லை. நி**.**சா**.**ஆ**.9** ஆனது 03.04.2019 அன்று அனுப்பப்பட்டது என்றால் ஆமாம். கெமிஸ்ட்டுகள் ஒத்துழைப்பு தரவில்லை பாதிப்பு நேர்ந்தது என சொல்லவதற்கு ஆதாரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. சாட்சியத்தில் தற்காலி transfer என சொல்லப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். ஆனால் தற்காலிக transfer என பணி மாறுதல் உத்தரவில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பணி மாறுதல் உத்தரவில் தற்காலிக transfer என குறிப்பிடபடாதபோது சாட்சியத்தில் தற்காலிக transfer என பின் சிந்தனையுடன் சொல்லப்பட்டுள்ளது என்றால் தவறு. 4 தொழிலாளர்களை வேறு வேறு தேதிகளில் பணி மாறுதல் செய்தற்கு காரணம் எதாவது உள்ளதா என்றால் USFDA தேவைக்காக பணி மாறுதல் செய்யப்பட்டார்கள். USFDA தேவை ஏற்பட்டது அவர்களின் ஆலோசணை பேரில் பணி மாறுதல் செய்யப்பட்டார்கள் என காட்ட ஆதாரம் தாக்கல் செய்யவில்லை. அது போன்று USFDA Audit ஆலோசனை எதுவும் எங்கள் நிறுவனத்தில் இல்லாத காரணத்தில் தான் தாக்கல் செய்யவில்லை என்றால் தவறு. நி**.**சா**.**ஆ**.6** முதல் **9** வரை உள்ள ஆவணங்களில் பிரமாண வாக்கு மூல சாட்சியம் பத்தி 8ல் சொல்லி உள்ள சங்கதிகள் சொல்லப்படாத காரணத்தினால் அந்த பணி மாறுதல் உத்தரவு Bonafide கிடையாது என்றால் தவறு. Industrial Establishment Standing Order

அட்டவணையில், தொழில் உறவுகள் சட்டத் தொகுப்பு 2020 முதல் அட்டவணையிலும், நிலையாணை வகுப்பதற்கான அயிட்டங்களில் Transfer இல்லை என்பதால், Transfer தொடர்பாக நியமன உத்தரவுகளிலோ, நிலையாணைகளிலோ ஷரத்து போட எங்கள் நிர்வாகத்திற்கு அதிகார வரையறை கிடையாது என்றால் சரியல்ல.

தொடர்ச்சி வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது.

Typed to my dictation, read over to interpreted to the witness and acknowledged by him to be correct.

S SUJATHA

Digitally signed by S SUJATHA
Date: 2026.04.09 19:16:52 +0530

Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:09.04.2026.